Crl.M.P. 52/2026 PW1– குணசீலன்

த/பெ சேகர் தேதி : 17.03.2026

**சத்தியபிரமாண வாக்குமூலம் :**

நானும் எதிரியும் நட்பு முறையில் பழகிவந்தோம். இந்நிலையில் கடந்த 27.11.2024ம் தேதி என்னிடம் எதிரி குடும்ப அவசர தேவைக்காகவும் மற்றும்மருத்துவ செலவிற்காகவும் ரூபாய் 500000ம் என்னிடம் கடனாக கேட்டார். அதற்கு எதிரி என்னிடம் 12 சதவீதம் வட்டியுடன் 1 வருடத்திற்குள் கொடுத்து விடுகிறேன் என்றும் அன்றைய தேதியிலேயே பணத்தை பெற்றுக்கொண்டார். மேலும் என்னிடம் பெற்ற கடனுக்கு ஆதரவாக எதிரி பின்தேதியிட்ட 27.11.2025ம் தேதி வங்கிக்குரிய காசோலை எண் 173585 எழுதி கையெழுத்து செய்து என்னிடம் கொடுத்தார். பின்னர் காசோலை எனது வங்கியான செக்காணூரணியில் உள்ள கனரா வங்கியில் வசூலுக்கு போட்ட போது கடந்த 29.11.2025ம் தேதி மேற்படி காசோலையை வசூலுக்கு போட்டதில அக்கவுண்டு கோல்ஸ்டு என திருப்பப்பட்டது. அதன்பின்பு நான் கடந்த 16.12.2025ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்ட எதிரி கடத்ந 27.12.2025ம் தேதி பதிலறிவிப்பு அனுப்பினார். மேற்படி எதிரியின் செயலினால் எதிரியின் மீது நடவடிக்கை எடுக்க கோரி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எதிரி பின்தேதியிட்ட 27.11.2025ம் தேதி வங்கிக்குரிய காசோலை எண் 173585 நகல் **பு.சா.ஆ.1** ஆகும் 29.11.2025ம் தேதியிட்ட கனரா வங்கியின் ரிட்டன் மெமோ அசல் **பு.சா.ஆ.2** ஆகும், 16.12.2025ம் தேதியிட்ட புகார்தாரர் தரப்பில் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **பு.சா.ஆ.3** ஆகும், 27.12.2025ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு நகல் **பு.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.